# DEPOSITION OF WITNESS

## In the Court of Judicial Magistrate No.II, Mettur

**Case No : C.C. 412/2024**

**Prosecution witness : அ.சா. 1** **Date : 20.09.2025.**

| Name : கண்ணன் | Caste : |
|---|---|
| Father's Name : | Calling : |
| Village : | Religion : |
| Taluk : | Age : |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**<u>முதல் விசாரணை</u>**

1) நான் சூரப்பள்ளி கிராமத்தில்ர குடியிருந்து ஓட்டுநராக வேலை செய்கிறேன். ஆஜர் எதிரி எனக்கு தெரியும். எனது உறவினர்கள் ஆவார்கள். எங்களுக்கும் எதிரிகள் குடும்பத்திற்கும் நிலம் சம்மந்தமாக பிரச்சனை இருந்து வருகிறது. 15 வருடங்களாக பிரச்சனை இருந்து வருகிறது,. இதுசம்மந்தமாக மேட்டுர் கோர்ட்டில் வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது. 12.01.2023 ம் தேதி காலை 10.30 மணியளவில் நான் வேலையை முடித்து வீட்டிற்கு வந்தேன்.

2. என் அம்மா தேங்காய் குடோனுக்கு சென்று தேங்காய் வாங்குவதற்காக எதிரிகள் வீட்டு வழியாக சென்றுவிட்டு திரும்பி வரும்போது எதிரி ராமர் எனது அம்மாவை கெட்டவார்த்தையால் திட்டி, அடிப்பதற்காக எங்கள் வீட்டிற்கே வந்து விட்டார். நான் அப்போது வேலையை முடித்துவிட்டு வீட்டிற்கு வந்துவிட்டேன். நான் என் அம்மாவிடம் கேட்டபோது தடத்தில் போகக்கூடாது என்று சொல்லி பிரச்சனை செய்ததாக என் அம்மா சொன்னார். அதை நான் எதிரி ராமரிடம் கேட்டதற்கு மூன்று எதிரிகளும் என்னை தேவடியா பையா, கண்டார ஓலி பையா என்று திட்டினார்கள்.

3. ராமர் வீட்டிற்கு சென்று என்னை வெட்டுவதற்காக கொடுவாள் எடுத்துவந்தார். முத்தம்மாளும், பெருமாளும் என்னை பிடித்துக்கொண்டாகள். ராமர் என் இடது மணிக்கட்டு மீது வெட்டினார். மீண்டும் என்னுடைய கழுத்தின் மீது ராமர் வெட்டவந்தபோது அதை தடுத்ததில் வலதுக்கை பெருவிரலில் காயம் ஏற்பட்டது. அதன்பிறகு அவர்களிடம் இருந்து தப்பித்துக்கொண்டு அருகிலிருந்த மாதம்மாள் என்பவர் வீட்டுக்கு சென்று ஒலிந்துக்கொண்டேன். ராமர் "இன்றைக்கு தப்பித்துக்கொண்டாய், என்னைக்கா இருந்தாலும் கொல்லாமல் விடமாட்டேன் என்று சொல்லிவிட்டு என் வீட்டு சாலை அருகில் கொடுவாளை தூக்கி எறிந்துவிட்டு போய்விட்டார்.

4. அதன்பிறகு நான் ஜலகண்டாபுரம் மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தேன். அதன்பிறகு போலீசார் என்னை மருத்துவமனை வந்து விசாரித்தனர். நான் நடந்ததை சொன்னேன். அவர்கள் எழுதிக்கொண்டு படித்துகாண்பித்து என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். புகார் வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1** ஆகும். நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் கொடுவாளால் தான் எதிரி ராமர் என் கையை வெட்டினார். கொடுவாள் **சா.பொ. 1** ஆகும். ஆஜர் எதிரிதான் எங்களை அடித்தார்கள் என்று சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார்.
போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை– இல்லை.**</u>

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 412/2024**

**Prosecution witness : அ.சா.2** **Date : 20.09.2025.**

| | |
|---|---|
| **Name : பாப்பா** | **Caste :** |
| **Father's Name : வீரப்பன்** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் பனங்காட்டுரில் குடியிருந்து கூலி வேலை செய்கிறேன். அ.சா.1 என்னுடைய மகன் ஆவார். எங்களுக்கும் எதிரிகளுக்கும் காட்டு பிரச்சனை இருந்து வருகிறது. 3 வருடங்களுக்கு முன்பு காலை 09.30 மணியளவில் நான் தேங்காய் வாங்கிவிட்டு வந்துக்கொண்டிருக்கும்போது எதிரி ராமர் என்னை தேவடியா, கண்டாரஓலி என்று திட்டி எங்கள் ரோட்டில் நடக்க கூடாது என்றுசத்தம் போட்டார்கள். 3 எதிரிகளும் துரத்திக்கொண்டு வந்தார்கள்.

2. அப்போது என்னுடைய மகன் அ.சா.1 வேலையை முடித்து விட்டு வீட்டிற்கு வந்தார். எதிரி ராமரிடம் எதற்காக என் அம்மாவை துரத்துகிறீர்கள் என்று கேட்டார். அப்படிதாண்டா செய்வேன் என்று அவருடன் வந்த 3 எதிரிகளும் கெட்டவார்த்தையால் திட்டினார்கள். எதிரிகள் பெருமாளும், முத்தம்மாளும் அ.சா.1 ஐ பிடித்துக்கொண்டார்கள். எதிரி ராமர் கொடுவாளால் என் மகனை கையில் வெட்டினார். நீதிமன்றத்தில் காட்டப்படும் கொடுவாளால் தான் எதிரி ராமர் என் மகனின் கையை வெட்டினார்.

3. மீண்டும் ராமர் கொடுவாளால் அ.சா.1 ன் கழுத்தில் வெட்டவந்தபோது அ.சா.1 வலது கையால் தடுத்ததால் வலது கை பெருவிரலில் வெட்டுபட்டது. அ.சா.1

ஓடிச்சென்று மாதம்மாள் வீட்டில் உள்ளே சென்றுவிட்டார். எதிரி ராமர் என்றைக்கு இருந்தாலும் கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டிசென்றார். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–இல்லை.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 412/2024**

**Prosecution witness : அ.சா.3** **Date : 20.09.2025.**

| | |
|---|---|
| **Name : மாதம்மாள்** | **Caste :** |
| **Father's Name : மாதையன்** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் பனங்காட்டுரில் குடியிருந்து கூலி வேலை செய்கிறேன். அ.சா.2 என்னுடைய உறவினர் ஆவார். எதிரிகளும் என்னுடைய உறவினர்கள். எதிரிகள் குடும்பத்தாருக்கும் அ.சா.1 ன் குடும்பத்தாருக்கும் குடும்ப பிரச்சனை இருந்து வருகிறது. சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை. அசா.1 ஐ யார் அடித்தார்கள் என்று எனக்கு தெரியாது. அ.சா.1 கையில் ரத்தத்துடன் வந்தார். நான் கையில் கட்டுப்போட்டு விட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துவிட்டேன். மற்றபடி எதுவும் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரித்தனர்.

**சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி, அரசு தரப்பில் கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி பிறழ் சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

2) எதிரிகளுக்கும், அ.சா.1 ன் குடும்பத்திற்கும் நிலம் சம்மந்தமாக பிரச்சனை இருந்து வருகிறது. சம்பவத்தின்போது எதிரி ராமர் கொடுவாளால் அ.சா.1 ன்

இரண்டு கைகளிலும் வெட்டி காயப்படுத்தியதையும், மற்ற இரண்டு எதிரிகளும் அ.சா.1 ஐ நகர விடாமல் பிடித்துக்கொண்டார்கள் என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை. காயம்பட்ட அ.சா.1 ற்கு நான் கையில் துணி மட்டும் கட்டிவிட்டேன். எதிரிகளும் புகார்தாரரும் உறவினர்கள் என்பதால் சம்பவத்தை நேரில் பார்த்துவிட்டு தற்போது பார்க்கவில்லை என சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தற்பொழுது எதிரிக்கு பரிந்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எ**<u>திரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>** இல்லை.

# DEPOSITION OF WITNESS

## In the Court of Judicial Magistrate No.II, Mettur

**Case No : C.C. 412/2024**

**Prosecution witness : அ.சா.4** **Date : 20.09.2025.**

| Name : சத்யா | Caste : |
|---|---|
| Father's Name : செல்வம் | Calling : |
| Village : | Religion : |
| Taluk : | Age : |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் பனங்காட்டுரில் குடியிருந்து கூலி வேலை செய்கிறேன். அ.சா.1 மற்றும் 2 மற்றும் எதிரிகளும் என்னுடைய உறவினர் ஆவார். சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை. அசா.1 ஐ யார் அடித்தார்கள் என்று எனக்கு தெரியாது. வேலைக்கு சென்றுவிட்டு மாலை வீட்டிற்கு வந்தபோது போலீசார் அங்கு இருந்தார்கள். அதன்பிறகு தான் இருவருக்கும் சண்டை நடந்தது எனக்கு தெரியும். மற்றபடி எதுவும் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரித்தனர்.

**சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி, அரசு தரப்பில் கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி பிறழ் சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

2) எதிரிகளுக்கும், அ.சா.1 ன் குடும்பத்திற்கும் நிலம் சம்மந்தமாக பிரச்சனை இருந்து வருகிறது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. சம்பவத்தின்போது எதிரி ராமர் கொடுவாளால் அ.சா.1 ன் இரண்டு கைகளிலும் வெட்டி காயப்படுத்தியதையும், மற்ற இரண்டு எதிரிகளும் அ.சா.1 ஐ நகர விடாமல்

பிடித்துக்கொண்டார்கள் என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை. எதிரிகளும் புகார்தாரரும் உறவினர்கள் என்பதால் சம்பவத்தை நேரில் பார்த்துவிட்டு தற்போது பார்க்கவில்லை என சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தற்பொழுது எதிரிக்கு பரிந்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எ**திரி தரப்பில் குறுக்கு விசாரணை–** இல்லை.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 412/2024**

**Prosecution witness : அ.சா.5** **Date : 20.09.2025.**

| | |
|---|---|
| **Name : சங்கீதா** | **Caste :** |
| **Father's Name : தங்கராஜ்** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டடப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் பணங்காட்டுரில் குடியிருந்து தேங்காய் உரிக்கும் வேலை செய்கிறேன். அ.சா.1 மற்றும் 2 மற்றும் எதிரிகளும் என்னுடைய உறவினர் ஆவார். சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை. அசா.1 ஐ யார் அடித்தார்கள் என்று எனக்கு தெரியாது. வேலைக்கு சென்றுவிட்டு மாலை வீட்டிற்கு வந்தபோது போலீசார் அங்கு இருந்தார்கள். அதன்பிறகு தான் இருவருக்கும் சண்டை நடந்தது எனக்கு தெரியும். மற்றபடி எதுவும் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரித்தனர்.

**சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி, அரசு தரப்பில் கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி பிறழ் சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

2) எதிரிகளுக்கும், அ.சா.1 ன் குடும்பத்திற்கும் நிலம் சம்மந்தமாக பிரச்சனை இருந்து வருகிறது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. சம்பவத்தின்போது எதிரி ராமர் கொடுவாளால் அ.சா.1 ன் இரண்டு கைகளிலும் வெட்டி

காயப்படுத்தியதையும், மற்ற இரண்டு எதிரிகளும் அ.சா.1 ஐ நகர விடாமல் பிடித்துக்கொண்டார்கள் என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை. எதிரிகளும் புகார்தாரரும் உறவினர்கள் என்பதால் சம்பவத்தை நேரில் பார்த்துவிட்டு தற்போது பார்க்கவில்லை என சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தற்பொழுது எதிரிக்கு பரிந்து  பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எ**திரி தரப்பில் குறுக்கு விசாரணை–** இல்லை.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 412/2024**

**Prosecution witness : அ.சா.6** **Date : 20.09.2025.**

| | |
|---|---|
| **Name : வீரப்பன்** | **Caste :** |
| **Father's Name : தானப்பன்** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் பனங்காட்டுரில் குடியிருந்து பெயிண்டிங் வேலை செய்கிறேன். அ.சா.1 எனது மகன் ஆவார். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு எனதுமனைவி பாப்பா தேங்காய் வாங்குவதற்காக சென்றுவிட்டு திரும்பி வந்தபோது அந்த தடத்தில் வரக்கூடாது என்று சொல்லி எதிரிகள் சத்தம்போட்டதாகவும், எங்களுடைய வீட்டிற்கு எதிரிகள் வந்து சத்தம்போட்டபோது என் மகன் அ.சா.1 கேட்டதால் அவரை எதிரி ராமர் என் மகனை கொடுவாளால் கைகளில் வெட்டியதாகவும், போன் செய்ததால் நானும், மற்றொரு மகன் தனபாலும் வீட்டிற்கு வந்தோம்.

2. எங்களை பார்த்தவுடன் எதிரி ராமர் கொடுவாளை அங்கேயே விட்டுவிட்டு சென்றுவிட்டார். என் மகன் அ.சா.1 ஐ காவல் நிலையம் அழைத்துசென்றோம். அங்கிருந்து ஜலகண்டாபுரம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு கொண்டுபோய் நான் தான் சேர்த்தேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

எ**திரி தரப்பில் குறுக்கு விசாரணை–** இல்லை.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 412/2024**

**Prosecution witness : அ.சா.7** **Date : 20.09.2025.**

| | |
|---|---|
| **Name : செல்வம்** | **Caste :** |
| **Father's Name : ஆறுமுகம்** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் பனங்காட்டுரில் குடியிருந்து பெயிண்டிங் வேலை செய்கிறேன். அ.சா.1 எனது தம்பி முறை ஆகிறது. எதிரிகளும் எனது உறவினர்கள். இரண்டு வருடங்களுக்கு முன்பு சம்பவம் சமயத்தில் வேலைக்கு சென்றுவிட்டு மதியம் 1 மணியளவில் சம்பவயிடத்திற்கு அருகிலுள்ள எனது வீட்டிற்கு வந்தேன். அப்போது அங்கு போலீசார் இருந்தார்கள். அப்போது போலீசார் சண்டை நடந்த இடத்தை படம் வரைந்து எழுதிக்கொண்டிருந்தார்கள். அப்போது நானும் அங்கிருந்தேன். எனக்கு வழக்கின் விவரங்களை சொல்லி என்னிடம் கையெழுத்து கேட்டார்கள் நான் கையெழுத்து போட்டேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரிலுள்ள 1 வது கையெழுத்து என்னுடையதுதான். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். பார்வை மகசர் **அதசாஆ.2** ஆகும்.

2. என்னிடம் காட்டப்படும் நீதிமன்றத்திலுள்ள அருவாள் நான் மதிய சாப்பாட்டு நேரத்தில் வந்தபோது சாலை வீட்டிலிருந்து போலீசார் பார்வையிட்டு கைப்பற்றினார்கள். அப்போது நான் மற்றும் மோகன் இருவரும் இருந்தபோது எங்களிடம் சாட்சியாக இருக்க கேட்டதன் பேரில் கையெழுத்து செய்தோம். இந்த அருவாள் அ.சா.1 க்கு எதிராக பயன்படுத்தப்பட்டது என்று சொன்னார்கள்.

என்னிடம் காட்டபடும் கைப்பற்றுதல் மகசரிலுள்ள 1 வது கையெழுத்து என்னுடையதுதான். சம்பவயிடத்தில் வைத்து கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தபோது நான் சாட்சியாக இருந்தேன். கைப்பற்றுதல் மகசரிலுள்ள 1 வது கையெழுத்து **அதசாஆ. 3** ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

எ**திரி தரப்பில் குறுக்கு விசாரணை–** இல்லை.

# DEPOSITION OF WITNESS

## In the Court of Judicial Magistrate No.II, Mettur

**Case No : C.C. 412/2024**

**Prosecution witness : அ.சா.8** **Date : 20.09.2025.**

| | |
|---|---|
| **Name : மோகன்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**<u>முதல் விசாரணை</u>**

1) நான் பனங்காட்டுரில் குடியிருந்து பெயிண்டிங் வேலை செய்கிறேன். அ.சா.7 எனது உடன்பிறந்த சகோதரர் ஆவார்.நான் மற்றும் எனது சகோதரர் இருவரும் மதியம் சாப்பிடுவதற்கு வந்தபோது போலீசார் அங்கிருந்தார்கள். கடந்த 12.01.2023 ம் தேதி மதியம் சுமார் 02.30 மணியளவில் சம்பவயிடத்திற்கு வந்த போலீசார் எங்கள் இருவர் முன்னிலையிலும் படம் வரைந்து எழுதி என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள் மற்றும் அ.சா.2 ன் உடைய சாலைவீட்டில் இருந்து திறந்த நீதிமன்றத்திலுள்ள அருவாளை கைப்பற்றினார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரிலுள்ள 2 வது கையெழுத்து என்னுடையதுதான். அதிலுள்ள விவரம் எனக்கு தெரியும். பார்வை மகசரிலுள்ள 2 வது கையெழுத்து **அதசாஆ.4** ஆகும். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரிலுள்ள 2 வது கையெழுத்து என்னுடையதுதான். அதிலுள்ள விவரம் எனக்கு தெரியும். கைப்பற்றுதல் மகசரிலுள்ள 2 வது கையெழுத்து **அதசாஆ.5** ஆகும்.போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எ**<u>திரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>** இல்லை.